O.S.57-2023

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.57/2023

வாதி தரப்பு 1வது சாட்சி சண்முகவள்ளி என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. சண்முகவள்ளி | வயது | : | 41/2025 |
| கணவர் பெயர் | : | ராஜா | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | வசந்தபுரி நகர் | தொழில் | : | ஆசிரியர் |

நாள்-05.03.2025

வா.சா.1

சாட்சி இன்று திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) பிரதிவாதி எனது பெரியப்பா மகன் என்றால் சரிதான். அந்த உறவுமுறையில் அவர் எனது திருமண நிகழ்வில் கலந்துகொண்டார் என்று சொன்னால் அவர் கலந்துகொள்ளவில்லை.

2) பிரதிவாதியின் சகோதரர்களான அழகர், மதியழகன் ஆகியோர் நடத்திய காதணிவிழாவில் நானும், எனது அப்பாவும், எனது கணவரும் கலந்துகொண்டோம் என்று சொல்வது சரியல்ல. மேற்படி காதணிவிழா அழைப்பிதழில் எனது பெயரையும், எனது கணவர் பெயரையும் அவர்கள் அச்சடித்திருந்தார்கள் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

3) எனது அண்ணன் குழந்தைகளுக்கும், எனது தம்பி மகளுக்கும் 05.11.2017 அன்று காதணி விழா நடத்தினோம் என்று சொன்னால் சரிதான். மேற்படி காதணிவிழாவிற்கு பிரதிவாதி உட்பட எனது பெரியப்பா மகன்களை நாங்கள் அழைக்கவில்லை என்றால் சரிதான்.

4) இத்தகைய சின்ன சின்ன பிரச்சினைகளால் எங்கள் இருவர் குடும்பத்திற்கும் முன் விரோதம் வளர்ந்து வந்தது என்று சொல்வது சரியல்ல.

5) நான், எனது அண்ணன், எனது தம்பி ஆகியோர் நன்றாக படித்திருக்கிறோம் என்றும், எனது பெரியப்பா குழந்தைகள் யாரும் பெரியளவில் படிக்காமல், கிராமத்தில் இருக்கிறார்கள் என்றும், அதனால் நாங்கள் அவர்கள் மீது ஆதிக்க மனப்பான்மையில் இருந்து வருகிறோம் என்றும் சொல்வது சரியல்ல.

6) எனது அண்ணன் தர்மராஜனின் மனைவி அன்னபூரணி பொதுப்பணித்துறையில் பொறியாளராக வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான்.

7) பிரதிவாதி என்மீது கொடுத்த புகாரின் பேரில் 28.09.2022 அன்று மாலை 5.00 மணியளவில் சம்பட்டிவிடுதி காவல் நிலையத்திலிருந்து என்னை விசாரணைக்கு அழைத்தார்கள். விசாரணைக்கு நான் சென்றிருந்தேன். அன்றைய தினம் காவல் நிலையத்தில் என்னிடம் எதுவும் எழுதி வாங்கவில்லை. நான் அன்றைய தினம் காவல் நிலையத்திற்கு செல்லாமலேயே சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொல்வது சரியல்ல.

8) அன்றைய தினம் எனது அண்ணன் தர்மராஜ், அண்ணி அன்னபூரணி, எனது தம்பி பாஸ்கர், எனது அப்பா ஆகியோர் காவல் நிலையம் சென்று ஆஜரான விபரத்தை தெரிவித்து காவல் நிலையத்தில் எழுதி கொடுத்தார்கள் என்றும், அதில் நான் கையெழுத்திடவில்லை என்றும், எனவே அன்றைய தினம் நான் காவல் நிலையத்திற்கே செல்லவில்லை என்றும் சொல்வது சரியல்ல.

9) எனது அப்பாவிற்கும், எனது பெரியப்பாவிற்கும் சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை ஏற்கனவே ஏற்பட்டுவிட்டது என்றும் அதனடிப்படையில் பிரதிவாதி ஒரு சொத்தை கிரையம் வாங்கியிருக்கிறார் என்றும், அது எனக்கு தெரிந்தும் பாகப்பிரிவினை கோரி புதுக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் நான் ஒரு வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொல்வது சரியல்ல. எங்கள் பூர்வீக சொத்துக்களுக்காக பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம்.

10) நான் இந்த வழக்கில் கூறியுள்ள வழக்குமூலம் தவறானது என்று சொல்வது சரியல்ல.

11) எனது பெரியப்பா மகன்களை பழிவாங்க வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் இந்த வழக்கை நான் தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் அப்படியெல்லாம் இல்லை.

12) நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்ககூடியது அல்ல என்று சொல்வது சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.